# இணைய வழிப் பாதுகாப்புச் சட்டத்துக்கு அங்கீகாரம் கிடைத்த பின்னரும் திருத்தங்களை மேற்கொள்வோம்!

## பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் தெரிவிப்பு



கடந்த ஆண்டு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட நிர்வாணப் புகைப்படங்கள் சட்டவிரோதமாக சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டன என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்று இணைய வழிப் பாதுகாப்பு சட்டமூலம் மீதான விவாதத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆண்டின் முதல் சில வாரங்களுக்குள் 500 க்கும் மேற்பட்ட நிர்வாணப் புகைப்படங்கள் சட்ட விரோதமாக இணையத்தில் பரப்பப்பட்டுள்ளதுடன் கடந்த ஆண்டு 6,690 இணையம் ஊடாக பாலியல் துஷ்பிரயோகங்களும் நடந்துள்ளன.

இந்தப் புள்ளிவிவரங்கள் சிஐடி யிடம் முறைப்பாடு வழங்கப்பட்டு பதிவு செய்யப்பட்டவை மட்டுமே. இன்னும் பல இணையக் குற்றங்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் பதிவு செய்யப்படாமல் இருக்கலாம், என்றும் அவர் தெரிவித்தார்

இதேநேரம், சிவில் சமூக அமைப்புக்கள், ஐ.நா வதிவிடப் பிரதிநிதி உள்ளிட்ட தரப்பினரால் இது குறித்து வழங்கப்படும் திருத்தங்கள் பரிசீலிக்கப்படும் எனவும் இந்தச் சட்டமூலத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர் மேலும் திருத்தங்களை நாங்கள் கொண்டு வருவோம், எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (04)

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 தை 09 செவ்வாய்க்கிழமை 23.01.2024 கதிர் 163

## மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்

### வரணியில் சோகம்

யாழ். தென்மராட்சி, கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணி - இயற்றாலைப் பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

தாவளை, இயற்றாலைப் பகுதியைச் சேர்ந்த 34 வயதான இளைஞரே சம்பவத்தில் சாவடைந்துள்ளார்.

மேற்படி இளைஞர் தனது வீட்டில் நேற்று மின் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த இளைஞருடைய சடலம் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## கிரிப்டோ நாணயம் தொடர்பில் சமூக ஊடகங்களின் மூலமாக ஏமாற்றும் மோசடியாளர்கள் குறித்து விழிப்புணர்வு அவசியம்!

### இலங்கை மத்திய வங்கி மக்களுக்கு அறிவுறுத்தல்

இன்றைய நாட்களில் கிரிப்டோகரன்ஸி முதலீட்டுடன் தொடர்புடையதாக கருதப்படும் மோசடி நடவடிக்கைகளில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை பாதுகாப்பதில் அவதானமாக இருக்குமாறும், மோசடி செய்பவர்கள் கையாளும் உத்திகள் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருப்பது மிகவும் அவசியம் எனவும் மத்திய வங்கி பொதுமக்களுக்கு

2➤

## யாழில் இரு பஸ்கள் விபத்து 8 பேர் வைத்தியசாலையில்





யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை வீதியில் இன்று காலை இரண்டு பேருந்துகள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் 8 பேர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பேருந்தின் சாரதிகள் இருவரும் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்று திங்கட்கிழமை காலை 6.30 மணியளவில் பயணி ஒருவரை ஏற்றுவதற்காக இலங்கை போக்குவரத்து சபை பேருந்து வீதியில் நிறுத்தப்பட்ட நிலையில்

2➤

## அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம் நாளை காலை முதல் பணிப்புறக்கணிப்பு

நாளை காலை 8 மணி முதல் நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனவரி மாதம் முதல் சம்பளத்துடன் 35,000 ரூபாவால் அதிகரிக்கப்பட்ட மேலதிகக் கொடுப்பனவை வழங்காதிருப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதை எதிர்த்து இந்த நடடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அதன்படி, இம்மாத சம்பளத்துடன் உரிய கொடுப்பனவு வழங்கப்படாவிட்டால் நாளை பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக இன்று கூடிய அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுச் சபை அறிவித்துள்ளது. (04)

## இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலம் இன்றும் நாளையும் நாடாளுமன்றத்தில்

இணையவழிப்பாதுகாப்புச்சட்டமூலம் இன்றும் நாளையும் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

முன்னதாக, இந்தச் சட்டமூலம் மீது விவாதம் நடத்தப்பட வேண்டுமா, வேண்டாமா? என்ற வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்றது.

சட்டமூலம் மீதான விவாதத்திற்கு ஆதரவாக 83 வாக்குகளும் எதிராக 50 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய இணையவழி அமைப்புகளின் பாதுகாப்பு தொடர்பான சட்டமூலம் இன்றும் நாளையும் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. (04)

## கச்ச தீவு அந்தோனியார் ஆலய மகோற்சவ முன்னேற்பாட்டுக் கூட்டம் நடைபெற்றது



கச்ச தீவு அந்தோனியார் ஆலய வருடாந்த மகோற்சவ முன்னேற்பாட்டுக் கூட்டம் யாழ் மாவட்ட அரச அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இன்று இடம்பெற்றது

பெப்ரவரி மாதம் 23, 24ம் திகதிகளில் கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த மகோற்வம் சிறப்பாக இடம் பெறவுள்ள நிலையில் குறித்த ஏற்பாடுகள் தொடர்பில் ஆராயும் இந்த முன்னேற்பாட்டுக் கூட்டத்தில், இவ்வருடம் இலங்கையிலிருந்தும் இந்தியாவில் இருந்தும் தலா 4,000 பக்தர்களைப் பங்குபற்ற அனுமதிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், பங்குபற்றுவோருக்கான சுகாதாரம், போக்குவரத்து உட்பட அடிப்படை வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் உணவு வழங்கல் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது,

மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற குறித்த முன்னாயத்தக் கூட்டத்தில், யாழ் இந்திய துணைத் தூதுவராலய அதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச செயலர், நெடுந்தீவு பங்குத்தந்தை, யாழ்மறை மாவட்ட குரு முதல்வர், கடற்படையின் பிராந்திய பொறுப்பதிகாரி பொலிஸ் உயரதிகாரிகள் ராணுவ உயரதிகாரிகள் மற்றும் துறைசார் திணைக்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர். (01)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழ்க் கிறித்தவ கலை உலகங்கள் - பன்னாட்டுக் கருத்தரங்கம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட நுண் கலைத் துறையும் தென்னிந்தியா - தமிழ்நாடு பாளையங் கோட்டைத் தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியின் நாட்டார் வழக்காற்றியல் துறை மற்றும் ஆய்வு மையமும் இணைந்து 'தமிழ்க் கிறித்தவக் கலை உலகங்கள்' என்ற பன்னாட்டுக் கருத்தரங்கினை ஜனவரி மாதம் 29 முதல் 31 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்தத் திட்டமிட்டுள்ளன.

இது தொடர்பாகக் கருத்தரங்கு ஒழுங்கமைப்பாளர்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

தமிழ்ப்பண்பாட்டிற்கு கிறிஸ்தவக் கலைகளின் பங்களிப்பும் கிறிஸ்தவத்திற்கு தமிழ் கலைவடிவங்களின் பங்களிப்பும் தமிழ்ப்பண்பாட்டின் பன்மைப் பரிமாணங்களைப் புரிந்து கொள்ளவதில் முக்கியமானவை. அந்தவகையில், நுண்கலைத்துறையின் ஐந்தாவது கருத்தரங்கானது இதுவரை அதிகம் பேசப்படாத இவ்விடயத்தில் கவனமெடுக்கிறது. காலனிய காலகட்டத்திற்கு முன்பிருந்தே பாக்கு நீரிணையின் இருபக்கமும் நடைபெற்று வந்த கலைச் செயற்பாடு சார்ந்த ஊடாட்டங்கள் கிறித்தவத்தின் தாக்கத்தினால் புதிய பரிமாணங்களை அடைந்தன.

தென்னிந்தியா - இலங்கை ஆகிய இருபகுதிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் இப்பண்பாட்டுப் பரிமாற்றங்கள் - எடுத்துக்காட்டாக சிற்பம், ஓவியம், கட்டடம், இசை, நாடகம் போன்ற செயற்பாடுகள் - முறையான ஆய்வுக் கவனத்தைப் பெறவில்லை. இப்பின்னணியில், பாக்கு நீரிணையின் இருபக்கமுமுள்ள தமிழ்ச் சமூகங்களில் கிறித்தவ சமயம் சார்ந்த ஊடாட்டங்களின் மூலம் கலைச் செயற்பாடுகளில் நிகழ்ந்த பரிமாற்றங்களை - பரிமாணங்களை ஆய்வுக்குட்படுத்தும் நோக்கில் இக்கருத்தரங்கம் ஒழுங்குபடுத்தப்படுகின்றது.

எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நிகழும் அங்குரார்ப்பண நிகழ்வில் அருட்தந்தை ஜெயசீலன் "தமிழ் கிறித்தவக் கலைகள்" என்ற தலைப்பிலும், மொரட்டுவை பல்கலைக்கழக விரிவுரையாளரும் கட்டடக்கலைஞருமான சாகர ஜெயசிங்க "வட இலங்கையின் 19ஆம் நூற்றாண்டுக் கட்டடக் கலையையும் கலையையும் ஆராய்தல்" என்ற தலைப்பிலும் திறப்புரைகளை வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வின் இறுதியில் கேராளவில் தமிழ் மொழியில் ஆற்றப்படும் கத்தோலிக்க ஆற்றுகை வடிவம் பற்றிய ஆவணப்படமும் திரையிடப்படுகிறது.

இந்த நிகழ்விற்கு முன்னராக, அதே தினம் மாலை 3 மணிக்கு "பண்பாட்டு ஒட்டு" என்ற தலைப்பிலமைந்த வட இலங்கைத் தேவாலயங்கள் பற்றிய ஒரு காட்சியும் நுண்கலைத்துறையின் கலைக்கூடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

தொடர்ந்து, 30ஆம் மற்றும் 31ஆம் திகதிகளில் எட்டு அமர்வுகளில் ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கப்படவுள்ளன. கருத்தரங்கின் தொடக்க நிகழ்ச்சிகளிலும் பிற அமர்வுகளிலும் அனைத்துக் கலை ஆர்வலர்களையும் ஆய்வாளர்களையும் மாணவர்களையும் கலந்து பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைக்கிறார்கள். 30ஆம் மற்றும் 31ஆம் திகதி அமர்வுகளுக்கான முன்பதிவுகளை நுண்கலைத்துறையில் மேற்கோள்ளலாம், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கலைப்பீடமும் இவ்வாண்டு தமது பொன்விழாவைக் கொண்டாடுகின்றன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (01)

## பாதுகாப்பு யுக்திகளை ஜேவிபி மாற்றியுள்ளது

தேசிய மக்கள் சக்தியின் (ஜேவிபி) அரசியல் தலைவர்களது உயிரைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள் மாற்றப்பட்டு புதிய பாதுகாப்பு யுக்திகளை கையாள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அக்கட்சி வட்டாரங்களின் மூலம் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக அறிய வந்துள்ளமையாலேயே கட்சி இந்த முடிவை எடுத்துள்ளதாகவும், அதற்கமைய, முன்னாள் பாதுகாப்பு அதிகாரிகளிடம் புதிய பாதுகாப்பு யுக்திகளுக்கான ஆலோசனைகளைப் பெற்றுள்ளதாகவும், அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் புதிய வழிமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கட்சியின் தனித்துவமான பாதுகாப்பு யுக்திகளே நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளாததாகவும், அதற்கு அப்பாற்பட்ட புதிய வழிமுறைகள் தேவை என உயர் பாதுகாப்பு அதிகாரிகள் கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெத-50)

## கொழும்புக்குள் வாகனங்கள் சீசிடிவி கண்காணிப்பில்

கொழும்பு நகரில் போக்குவரத்து சட்டத்தை மீறும் சாரதிகளை இனங்காண்பதற்காக புதிய சீசிடிவி கண்காணிப்பு முறையொன்று நேற்று (22) முதல் பொலிஸாரால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு நகருக்குள் நுழையும் வாகனங்கள் 108 சி.சி.டி.வி. கெமராக்கள் மூலம் கண்காணிக்கப்படும். இந்த புதிய முறையின் கீழ், போக்குவரத்து விதிகளை மீறியதாக உறுதி செய்யப்பட்ட சாரதிகளுக்கு, சம்பந்தப்பட்ட நபர் வசிக்கும் பகுதியில் உள்ள காவல்துறை மூலம் உரிய அபராத பத்திரம் வழுங்கப்படும்.

மேற்படி சி.சி.டி.வி கண்காணிப்பு முறை குறித்து சாரதிகளுக்கு முன்கூட்டியே அறிவிக்கும் வகையில், கொழும்புக்குள் பிரவேசிப்பதற்கான பிரதான 09 நுழைவு பாதைகளில் அறிவிப்பு பலகைகளை காட்சிப்படுத்த பொலிஸார் ஏற்பாடுகளை செய்துள்ளனர். (ரெத-52)

## மாணவர்கள் வசம் கஞ்சா

கடந்த ஞாயிறன்று தொம்பகஹவெல பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, தொம்பகஹவெல நகரில் மேலதிக வகுப்புக்கு சென்று கொண்டிருந்த இரு பாடசாலை மாணவர்களிடம் இருந்து தலா 03 கிராம் கணக்கில் மொத்தமாக 6 கிராம் உலர் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

11 மற்றும் 12 ஆம் தரங்களில் கல்வி கற்கும் அதே பிரதேசத்தில் வசிக்கும் 16 மற்றும் 17 வயதுடைய இரு பாடசாலை மாணவர்களே தொம்பகஹவெல நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். (ரெத-53)

## யாழில் இரு பஸ்கள் விபத்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னால் வேகமாக வந்த தனியார் பேருந்து அதன் மீது மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது இரண்டு பேருந்துகளும் பலத்த சேதத்திற்கு உள்ளானதுடன் காயமடைந்தவர்கள் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## கிரிப்டோ நாணயம் தொடர்பில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவுறுத்தியுள்ளது.

பெரும்பாலும் இந்த முதலீடுகள் ஊடாக பெருமளவு இலாபம் கிடைத்துள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியிடப்படுகின்ற போலியான பதிவுகள் மூலம் மக்கள் மத்தியில் இவை சட்டபூர்வமானவை என்ற தோற்றத்தை ஏற்படுத்தி மேற்படி மோசடி நடவடிக்கைகளுக்கு புதியவர்களை ஈர்ப்பதே இந்த மோசடியாளர்களின் முக்கிய தந்திரோபாயங்களில் ஒன்றாக உள்ளது எனவும் மத்திய வங்கி சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் தடைசெய்யப்பட்ட சில நிறுவனங்கள், கிரிப்டோ நாணயத்தின் பாவனையை ஊக்குவிக்கும் உபாயங்களை கையாண்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

எனவே, கிரிப்டோகரன்ஸி முதலீட்டு மோசடிகள் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுதலே அதனை தடுப்பதில் முக்கிய பங்கினை வகிக்கும் எனவும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (ரெத-49)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட



காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தெற்காசிய நகர்வல (Cross - Country) ஓட்ட தெரிவு போட்டியில் மலையக வீரர் வக்சனுக்கு முதலிடம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

தெற்காசிய நகர்வல ஓட்டம் சம்பியன்ஷிப் தொடரை இலக்காகக் கொண்டு நடைபெற்ற தெரிவுப் போட்டியில் இலங்கை இராணுவம் சார்பில் பங்குகொண்ட மலையக வீரர் விக்னராஜ் வக்சன் முதலிடம் பெற்றுள்ளார்.

பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி நடைபெறவுள்ள 3 ஆவது தெற்காசிய நகர்வல ஓட்டம் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கையின் சார்பாக பங்குபற்றுகின்ற வாய்ப்பை அவர் பெற்றுக்கொண்டார்.

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள தெற்காசிய நகர்வல ஓட்டம் சம்பியன்ஷிப் தொடரை இலக்காகக் கொண்டு இலங்கை மெய்வல்லுனர் சங்கமும், லங்கா லயன்ஸ் மெய்வல்லுனர் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்த தெரிவுப் போட்டி கடந்த ஞாயிறு ஜ20ஸ ஹோமாகம, தியகமவில் நடைபெற்றுது.

10 கிலோமீற்றர் தூரத்தைக் கொண்ட ஆண்களுக்கான நகர்வல ஓட்டப் போட்டியில் இலங்கை இராணுவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குகொண்ட விக்னராஜ் வக்சன் முதலிடம் பிடித்தார். போட்டியை நிறைவு செய்ய 32.11 செக்கன்களை அவர் எடுத்துக் கொண்டார்.

அண்மைக்காலமாக தேசிய ரீதியிலான நகர்வல ஓட்டம், அரை மரதன், 10 ஆயிரம் மீற்றர், 5 ஆயிரம் மீற்றர் மற்றும் 1500 மீற்றர் ஆகிய ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளை ஈட்டி வருகின்ற தலவாக்கலையைச் சேர்ந்த வக்சன், இறுதியாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற பாதுகாப்பு சேவைகள் மெய்வல்லுனர் தொடரில் ஆண்களுக்கான 1500 மீற்றர் மற்றும் 5,000 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்று அசத்தியிருந்தார்.

அதுமாத்திரமின்றி, 2019ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய விளையாட்டு விழா நகர்வல ஓட்டத்தில் அவர் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உதய விருச்சம் சன சமூக நிலைய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை செல்வநாகபுரம், உதயபுரி - உதய விருச்சம் சன சமூக நிலைய அனுசரணையில் டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

உப்புவெளி பொலிஸ் அதிகாரி, பொதுச் சுகாதரப் பரிசோதகர் உதயன், கிராம சேவகர் அகியோரின் தலைமையில் உதயபுரிக் கிராமப் பொதுமக்கள், சகல சங்க பிரதிநிதிகளின் பூரண ஒத்துழைப்போடு டெங்கு ஒழிப்பு நிகழ்வு நடைபெற்றது .

டெங்கு பரவும் இடங்கள் உள்ளிட்ட பல வடிகான்களும் சுத்தம் செய்யப்பட்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது.

# கல்முனை மாநகரத்தின் வருமான பரிசோதகர்களுக்கு பிரியாவிடை



(ஏயெஸ் மௌலானா)

கல்முனை மாநகர சபையில் வருமானப் பரிசோதகர்களாக கடமையாற்றி, அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் கே.குணரட்னம் மற்றும் எம். சலீம் ஆகியோருக்கும் இங்கிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் வருமான பரிசோதகர் எம்.ரி.சப்னம் சாஜிதாவுக்குமான பிரியாவிடை நிகழ்வு மாநகர சபையின் நிதிப் பிரிவினரின் ஏற்பாட்டில் நேற்று திங்கட்கிழமை (22) மாலை நடைபெற்றது.

மாநகர சபையின் கணக்காளர் கே.எம்.றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி பிரதம அத்தியாக கலந்து கொண்டிருந்ததுடன் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச்.ஜௌஸி ஆகியோர் உட்பட நிதிப் பிரிவு உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது குறித்த உத்தியோகத்தர்கள் மூவரும் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி, கௌரவிக்கப்பட்டனர். கல்முனை மாநகர சபையில் இவர்கள் ஆற்றிய அர்ப்பணிப்பு மிக்க சேவைகளைப் பாராட்டி உரையாற்றிய ஆணையாளர், மாநகர சமூகத்தின் சார்பில் நன்றியும் வாழ்த்தும் தெரிவித்தார்.

இந்நிகழ்வை நிதிப் பிரிவு உத்தியோகத்தர்களின் சார்பில் வருமானப் பரிசோதகர் சமீம் அப்துல் ஜப்பார் ஒருங்கிணைப்பு செய்து, நெறிப்படுத்தியிருந்தார்.

# கற்பிட்டி தில்லையூர் பாடசாலை ஐந்து நிகழ்வுளுக்கான விழா



(கற்பிட்டி செய்தியாளர் சியாஜ் )

கற்பிட்டி தில்லையூர் பாடசாலையின் அதிபர் எஸ்.எம் அரூஸ் தலைமையில் இடம்பெற்ற ஐந்து நிகழ்வுகளான பாடசாலையின் பிரதான நுழைவாயில் முகப்பிற்கான அடிக்கல் நாட்டல், வாசிகசாலைக் கட்டிடம் திறப்பு, இம்முறை ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி கௌரவிப்பு, மாணவத் தலைவர்களுக்கான பதக்கம் அணிவித்தல் மற்றும் புத்தளம் மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் இன் சொந்த நிதியின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் “அறிவால் உலகை ஆள்வோம் – அறிவார்ந்த சமூகமே எமது இலக்கு “ எனும் கருப்பொருளில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஆகியவை ஒருங்கிணைந்த விழாவில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதில் விசேட அதிதிகளாக கற்பிட்டி அமைப்பாளர் யூ.எம் அலி ஜின்னா, புத்தளம் நகர சபையின் முன்னால் உறுப்பினர் எம். மாஹிர், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எம்.ஆசிக், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் எச்.அமீர் அலி மற்றும் ஊடக செயலாளர் எம்.எம் நவ்பர் ஆகியோருடன் பெற்றோர்கள் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# பாலஸ்தீன தேசம் அமையாவிட்டால் இஸ்ரேலை அங்கீகரிக்கமாட்டோம்!

## சவுதி அரேபியா திட்டவட்டம்




தனிபாலஸ்தீனதேசம்அமைவதற்கான பாதை வகுக்கப்படாவிட்டால் இஸ்ரேலை ஒரு நாடாக அங்கீகரிக்கப்போவதில்லை என்று சவுதி அரேபியா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் பெருமுயற்சியின் பலனாக நீண்ட காலம் பகை நாடுகளாக இருந்து வந்த இஸ்ரேலுக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையை சுமூக உறவு ஏற்படுவதற்கான சூழல் ஏற்பட்டு வந்தது.

இந்த நிலையில், தனி பாலஸ்தீன தேசம் அமைவதை ஏற்க முடியாது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியதைத் தொடர்ந்து சவுதி அரேபியா இவ்வாறு தெரிவித்துள்ளது.

இது குறித்து சிஎன்என்- தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில், சவூதி இளவரசரும் வெளியுறவுத் துறை அமைச்சருமானபைசல்பின்பர்ஹான்அல் சவூத், தனி பாலஸ்தீனம் அமைவதற்கான நம்பிக்கை அளிக்கக்கூடிய, பழைய நிலைக்கு மீண்டும் திரும்ப முடியாத நகர்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிக அவசியமாகும்.

அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் இஸ்ரேலுடன் தூதரக உறவை சகஜமாக்குவதற்கான பேச்சுவாாத்தை மேற்கொள்ளப்படாது.

போருக்குப் பிந்தைய காஸா பகுதியின் மறுகட்டமைப்புப் பணிகளுக்கு சவுதி அரேபியா உதவிகளைச் செய்யும், என்று குறிப்பிட்டார்.

பாலஸ்தீனப் பகுதியில் நீண்ட காலமாக குடியேறி வந்த யூதர்கள், இஸ்ரேல் உருவாக்கத்தை 1948 ஆம் ஆண்டு பிரகடனம் செய்தார்கள். அதனை ஐக்கியநாடுகள் அங்கீகரித்தது. இருந்தாலும், இதனை பாலஸ்தீன தேசியவாத அமைப்புகளும் ஏராளமான முஸ்லிம் நாடுகளும் அங்கீகரிக்கவில்லை.

இஸ்ரேலின்கெரெம்ஷலோம்எல்லைச் சாவடி வழியாக தெற்கு காஸா பகுதிக்கு நிவாரணப்பொருள்களுடன்திங்கட்கிழமை சென்றஎகிப்துவாகனத்தைசோதனையிட்ட இஸ்ரேல் படையினர்.

இஸ்ரேலும், பாலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டில்உள்ளபகுதிகளை தனி பாலஸ்தீன நாடாக அங்கீகரிக்க மறுத்து வருகிறது.

இந்தச் சூழலில், ஒரு தனி பாலஸ்தீனநாட்டுக்குஇஸ்ரேலும் இஸ்ரேலுக்குஎதிர்த்தரப்பினரும் அங்கீகாரம்வழங்கி இரண்டும் தனித்தனி சுதந்திர நாடுகளாக செயல்படுவதே பாலஸ்தீன பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு என்று இந்தியா உள்ளிட்ட நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இதற்கிடையே, இஸ்ரேலுக்கும், அரபு நாடுகளுக்கும் இடையே தூதரக உறவை ஏற்படுத்துவதற்கான அமெரிக்காவின் -அப்ரஹாம் ஒப்பந்தம்- என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக, இஸ்ரேல் - சவுதி அரேபியா ஆகியநாடுகளுக்குஇடையேசுமூகஉறவை ஏற்படுவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்தன.

இந்தச் சூழலில், காஸா போர் முடிவுக்கு வந்ததற்குப் பிறகு அந்தப் பிராந்தியத்தில் தனி பாலஸ்தீன தேசம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அமெரிக்கா கூறி வருகிறது. எனினும், அமெரிக்காவின் இந்த யோசனையை ஏற்க முடியாது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடந்த வாரம் அறிவித்து அதிர்ச்சி அலையை ஏற்படுத்தினார்.

இந்த நிலையில், தனி பாலஸ்தீனம் அமைப்பதற்கான நகர்வுகள் மேற்கொள்ளப்படாவிட்டால் இஸ்ரேல் அங்கீகரித்து அந்த நாட்டுடன் தூதரக உறவை ஏற்படுத்தப் போவதில்லை என்று சவுதி அரேபியா தற்போது திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. (04)

## முதல் இரண்டு டெஸ்ட்களிலும் விராட் கோலிக்கு ஓய்வளிப்பு



இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடரின் முதல்இரண்டுபோட்டிகளில் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்டவீரரான விராட் கோலி விளையாடமாட்டார் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா வரும் இங்கிலாந்து அணியானது அங்கே ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடுகின்றது.

இந்த டெஸ்ட் தொடரின் முதல் போட்டி இம்மாதம் 25ஆம் திகதி ஹைதராபாதில் ஆரம்பமாகவுள்ள நிலையில் விராட் கோலி சொந்த காரணங்கள் கருதி டெஸ்ட் தொடரின் முதல் போட்டிகள் இரண்டிலும் ஆட மாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விராட் கோலி முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் ஆடாத விடயம் தொடர்பில் இந்திய டெஸ்ட் அணியின் தலைவர் ரோஹிட் சர்மாவிடமும், அணி நிர்வாகத்திடமும் உத்தியோகபூர்வமாக அறிவித்திருப்பதாக கூறப்பட்டிருக்கின்றது.

இதேவேளை இங்கிலாந்து அணிக்கு எதிராக டெஸ்ட் போட்டிகளில் 1991 ஓட்டங்களை 42.36 என்கிற துடுப்பாட்ட சராசரியுடன் குவித்திருக்கும் விராட் கோலி, ராஜ்கோட்டில் நடைபெறும் தொடரின் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இருந்து இந்திய அணிக்காக தொடர்ந்து விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (04)

## பாகிஸ்தான் - ஈரான் நாடுகள் மீண்டும் தூதரக உறவுகளை ஆரம்பிக்க ஒப்புதல்

கடந்த வாரம் பரஸ்பரம் தாக்குதல் நடத்திக்கொண்ட பாகிஸ்தானும், ஈரானும் திரும்ப அழைக்கப்பட்டிருந்த தத்தமது தூதர்களை மீண்டும் பணியில் அமர்த்த ஒப்புக் கொண்டுள்ளன. இது குறித்து பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சக அலுவலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில், ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹுசைன் அமீர்-அப்துல்லாஹியானுடன் பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜலீல் அப்பாஸ் ஜிலானி தொலைபேசியில் உரையாடினார்.

அப்போது, பாகிஸ்தானிலிருந்து திரும்ப அழைக்கப்பட்டிருந்த ஈரான் தூதரையும், அந்த நாட்டிலிருந்து திரும்ப அழைக்கப்பட்டிருந்த பாகிஸ்தான் தூதரையும் மீண்டும் பணியில் அமர்த்த இரு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இரு நாட்டு தூதரக உறவை சகஜ நிலைக்குக் கொண்டு வரும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஜலீல் அப்பாஸ் ஜிலானியின் அழைப்பை ஏற்று, பாகிஸ்தானுக்கு வரும் 29 ஆம் தேதி வருகை தர ஈரான் அமைச்சர் ஹுசைன் அமீர்-அப்துல்ஹியான் சம்மதித்துள்ளார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈரான் துணை ராணுவத்தின் சிறப்பு அதிரடிப்படைப் பிரிவு தளபதியாக இருந்தவர் காசிம் சுலைமானி. அந்த நாட்டில் மிகவும் செல்வாக்கு மிக்கவராக விளங்கிய அவர் இராக் சென்றிருந்தபோது, அவரைக் குறிவைத்து ஆளில்லா விமானம் மூலம் அமெரிக்கா கடந்த 2020 ஜனவரி மாதம் தாக்குதல் நடத்தியது. இதில் சுலைமானி உள்பட 8 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில், காசிம் சுலைமானியின் நான்வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சொந்த ஊரான கெர்மானில் அவருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி கடந்த 3 ஆம் திகதி நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கானவர்கள் பங்கேற்றனர்.

அப்போது இருவர் நடத்திய தற்கொலை குண்டுவெடிப்பில் இதில் 94 பேர் உயிரிழந்து, 280 பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு இஸ்லாமிய தேச (ஐஎஸ்) பயங்கரவாதிகள் பொறுப்பேற்றனர். இருந்தாலும், இதற்குப் பதிலடியாக, இஸ்ரேல் உளவு அமைப்பான மொஸாட் மற்றும் இஸ்லாமிய தேச (ஐஎஸ்) பயங்கரவாத அமைப்பின் நிலைகளில் குறிவைத்து சிரியாவிலும், இராக்கிலும் வான்வழித் தாக்குதல் நடத்தியதாக ஈரான் கடந்த வாரம் அறிவித்தது.

அதே நாளில், பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்திலும் ஈரான் வான்வழித் தாக்குதல் நடத்தியது. அங்கிருந்து தங்கள் நாட்டில் செயல்பட்டு வரும் பலூச் பிரிவினைவாதிகளான ஜெய்ஷ் அல்-அதல் அமைப்பின் இரு நிலைகளில் குறிவைத்து இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஈரான் கூறியது.

அதற்குப் பதிலடியாக, ஈரானின் சிஸ்தான் - பலூசிஸ்தான் மாகாணத்தில் பயங்கரவாத நிலைகளில் தாக்குதல் நடத்துவதாகக் கூறி பாகிஸ்தானும் வியாழக் கிழமை துல்லியத் தாக்குதல் நடத்தியது.

இதனால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் வெகுவாக அதிகரித்தது. இரு நாடுகளும் தங்களது தூதர்களைத் திரும்ப அழைத்தன. இந்தச் சூழலில், பதற்றத்தைத் தணிக்கும் வகையில் இரு நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர்களும் தற்போது பேச்சுவார்த்தை நடத்தி, இரு தரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த ஒப்புக் கொண்டனர். அதன் தொடர்ச்சியாக, திரும்ப அழைக்கப்பட்ட தத்தமது தூதர்களை மீண்டும் பணியமர்த்த இரு நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர்களும் தற்போது ஒப்புக்கொண்டுள்ளனர். (04)



# கோடிங் மூலம் இணையத்தளங்களை உருவாக்கும் போட்டியில் முதலிடம் பெற்ற ஏறாவூர் அலிகார் மாணவர்களுக்கு கௌரவம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தகவல் தொழில்நுட்ப துறையில் இணைய தளங்களை உருவாக்கும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டியொன்றை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் அண்மையில் நடாத்தியது.

இரண்டு சுற்றுக்களாக நடாத்திய இப் போட்டியில் நாடு தளுவிய ரீதியில் 125 பாடசாலைகள் பங்கேற்றன.

இரண்டாம் சுற்றுக்கு கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக பெண்கள் கல்லூரி, குளியாப்பிட்டிய மத்திய கல்லூரி, ஏறாவூர் அலிகார் தேசிய கல்லூரி, ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி, மிஹிந்தலே மத்திய கல்லூரி ஆகிய தெரிவு செய்யப்பட்டிருந்தன.

தரம் 6 தொடக்கம் 9 வரையிலான மாணவர்கள் பங்கேற்ற இப்போட்டியில் ஏறாவூர் அலிகார் தேசிய கல்லூரி முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தினை பெற்றுக் கொண்டது.

வெற்றியீட்டிய மாணவர்களையும், பயிற்சி வழங்கிய ஆசிரியர்களையும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.




# இயலாமையுடைய நபர்களுக்கான தொழில் ஆதரவு மேம்படுத்தல்



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் இயலாமை உடைய நபர்களுக்கான தொழில் ஆதரவை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் பங்குதாரர்களுக்கான நிகழ்வு இடம் பெற்றது.

குறித்த நிகழ்வானது திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இன்று (23) இடம் பெற்றது.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் 2024 ஆம் ஆண்டுக்கான இயலாமை உடைய நபர்களை தொழிலில் இணைத்தல் எனும் திட்டத்துக்கு அமைவாக இடம் பெற்றது.

இதனை சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் மனிதவள அபிவிருத்தி திணைக்களம் இணைந்து ஏற்பாடு செய்துள்ளதுடன் பூரண ஒத்துழைப்பை ஜய்க்கா ஊடாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் திருகோணமலை மாவட்டத்தில் இயலாமை உடைய நபர்கள் இத்திட்டம் மூலம் தொழிலில் இணைத்து கொள்ளப்பட்டு இதன் மூலம் சமூகத்தில் அவர்களும் பங்குதாரர்களாக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில் சமூக சேவைகள் திணைக்கள சமூக சேவை உத்தியோகத்தர்கள்,மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர் த.பிரணவன் உட்பட சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,மனிதவலு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஜய்க்கா நிறுவன உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதிக்கம்பனிகளின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.

# மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தில் பௌர்ணமி பொங்கல் கவியரங்கம்!




(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் பொங்கல் கவியரங்கம் நாளை மறுதினம் 25ஆம் தேதி வியாழக்கிழமை பௌர்ணமியன்று சங்கத் தலைவர் சைவப்புரவலர் வி. ரஞ்சிதமூர்த்தி தலைமையில் தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டின் யுலேகா முரளிதரனும், சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன், மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் தலைவர் சித்திரப்போடி மாமாங்கராஜா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி மு.கணேச ராஜா வரவேற்புரை நிகழ்த்த, தமிழ்ச்சங்க காப்பாளர் கலாநிதி எஸ்.கோபாலசிங்கம் (கவிக்கோ வெல்லவூர் கோபால்) தலைமையில் கவியரங்கம் நடைபெறும்.

கவியரங்கத்தில் கா.சிவலிங்கம், மண்டூர் அசோகா, இந்திராணி புஸ்பராஜா, ச. கணேசமூர்த்தி, இ.பிரதீஸ்காந்த், ஜெ.அம்ரிதா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# அல் ஹிலால் பாலர் பாடசாலையின் கலை கலாசார விடுகை விழா

(எம்.எப். நவாஸ்)

ஒலுவில் அல் ஹிலால் பாலர் பாடசாலையின் கலை கலாசார விடுகை விழா ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் தபால் அதிபர் எம். அப்துல் ரஹ்மான் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸாரப் கலந்து கொண்டதுடன் இந்நிகழ்வில் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பிரமுகர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்

இந்நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள் நினைவுச் சின்னம் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.









# கடற்கரைப் பிரதேசங்கள் குப்பை நிறைந்து துர்நாற்றம் வீசும் நிலை



அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினைத் தொடர்ந்து இம்மாவட்டத்தின் கடற்கரைச் சூழல் வெகுவாக பாதிப்படைந்து காணப்படுவ-தாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடற்கரைப் பிரதேசங்களில் குப்பைகூழன்கள், பொலித்தீன் கழிவுகள் மற்றும் பிளாஸ்றிக் பொருட்கள் போ-ன்றன நிறைந்து காணப்படுவதனால் பொதுமக்களும் கடற்றொழிலாளர்களும் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் இம்மாவட்டத்தில் பெய்த அடை மழையினைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ள நிலைமையின் போது ஆறுகள், குளங்கள் மற்றும் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் காணப்பட்ட நீர்த் தாவரங்கள், கழிவுப் பொருட்கள் போன்றன நீர் வழியாக கடலைச் சென்றடைந்தன. இவை கடலலை மூலம் தரைக்கு அப்புறப் படுத்தப்பட்டதனால் அம்பாறை மாவட்டத்தின் கடற்கரைப் பிரதேங்கள் பல குப்பை கூழன்கள் நிறைந்ததாக காட்சியளிக்கின்றன.

இதேவேளை, சில பிரதேசங்க-ளில் இக்கழிவுப் பொருட்களில் விஷப் பாம்புகள் மறைந்திருந்து நடமாடி வருவதாகவும் பிரதேச மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதுதவிர கழிவுப் பொருட்களில் இருந்து துர்நாற்றம் வீசி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கடற்கரைப் பிரதேசங்களில் காணப்படும் கழிவுப் பொருட்களை சம்பந்தப்பட்ட தரப்பினர் துப்பரவு செய்து பொதுமக்கள் நலனில் அக்கறை செலுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# 61 வயதுடைய பெண் கைது!

யுக்திய நடவடிக்கைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் தடைசெய்யப்பட்ட மாத்திரைகளை விற்பனை செய்து வந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையின் அதிகா ரிகள் நேற்று (22) வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவில், புவத்கஹவத்தை, முதலாம் பிரதேசத்தில் இந்த சுற்றி வளைப்பை முன்னெடுத்தனர்.

இதன்போது மருத்துவ சீட்டு இன்றி 89 தடை செய்யப்பட்ட மாத்திரைகளை வைத்திருந்த 61 வயதுடைய பெண் கைது செய்யப்பட்டு மேலதிக விசார ணைக்காக வெல்லம்பிட்டி பொலிஸ ா ரிடம் ஒப்படைக்கப்பட்டார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.01.2024 இல் வெளியிடப்பெற்றது.